**மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ விதிக்கப்பட்டுள்ள 2000 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவக ஒழுங்கு விதிகளின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுளுக்கு அமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அந்த ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையமானது கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அந்த ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் துணைப் பிரிவின் பிரகாரம், நிலையத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின; பொறுப்புக்கள்

முழுமையாக எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கப்படும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

என்னால் தொழில் தீர்ப்புக்கள் மற்றும் தொழில் ஐயப்பாட்டினையும் பேணும் வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானவாறும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறு அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதும், அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- யாதேனுமொரு எழுத்து மூலமான சட்டம் அல்லது நிலையத்தின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்ட விசேட கட்டளை தொடர்பாக இணங்கியிருந்ததா என்பதும்,

- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளின் உள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கு இணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

-------------------------

### 1.5.1 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------------

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான “திட்டமிட்டு பேணிவரப்படுகின்ற” உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனத்தினால் பேணிவருதல் அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

| குறித்த தரத்திற்கான குறிப்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆவது பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்மிகு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையினால் செலவிகம் ரூ.15,625,781 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீட்டுத் தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள் மதிப்பீடு செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டிலே மேற்கொள்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்குநடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வு ஆண்டிலே செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் சார்பாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இணக்கம் தெரிவிக்கின்றேன். இதற்காக முகாமைத்துவ சபையின் அனுமதியினைப் பெற்றுக்கொண்டு 2019 ஆம் ஆண்டிலே மொத்த திரண்ட ஒதுக்கங்களில் இருந்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திரண்ட செலவினங்களுக்கு சரியாக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

| சட்டங்கள், ஒழுங்கு விதிகள், பிரமாணங்கள் என்பன | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் கோவையின் நிதி ஒழுங்கு விதிகள் 1646 | நிறுவனம் பயன்படுத்துகின்ற 12 வாகனங்களுக்குரிய பயணக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த சுருக்கங்கள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நாளாந்த பயணக் குறிப்புக்கள் தற்போது பேணி வரப்படுவதுடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மாதாந்தம் சமர்ப்பிப்பதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) பல்கலைக்கழக ஒழுங்கு விதிகள் கோவையின் XXVII ஆம் அத்தியாயத்தின் 9.2 மற்றும் 9.4 ஆம் பந்திகள் | முன்னளிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் வாகனங்களுக்கு இருப்பு பதிவுப்புத்தக ஆவணங்கள் பேணி வரப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய இலக்கம் 842 உடைய அரச கணக்குகள் சுற்றறிக்கை | நிறுவனத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவுப்புத்தகம் தயாரித்திருக்கவில்லை. | அனைத்து இனங்காணப்பட்ட நிலையான சொத்துக்களின் முழுமையான ஆவணமொன்று மற்றும் ஒவ்வொரு பண்டங்களுக்குமான குறியீட்டு முறையொன்று மிக விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) 2003 யூன் 02 ஆம் திகதிய இலக்கம் PED/12 உடைய பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | நிதி அமைச்சரின் முன் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளாது மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூ.15,574,767 பெறுமதியான தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. | அனைத்து முதலீடுகள் தொடர்பாகவும் நிதி அமைச்சின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி பெறுபேறு

மீளாய்வு ஆண்டின் தொழிற்பாட்டு பெறுபேறு ரூ. 30,082,608 தொகை பற்றாக்குறை ஒன்றினை கொண்டிருந்ததுடன் அதற்கு மாறாக கடந்த ஆண்டின் குறைபாடானது ரூ.74,313,847 ஆகும். அதன் பிரகாரம், நிதி பெறுபேறுகளில் ரூ.44,231,239 பெறுமதியான விருத்தி ஒன்றினை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்விருத்திக்கு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டிற்கான மீண்டுவரும் கொடைகள் ரூ.143,935,000 தொகையினால் அதிகரித்து ஆளுக்குரிய வேதனாதி செலவினங்கள் ரூ.99,822,282 தொகையினால் அதிகரித்திருந்தமை காரணமாக அமைந்திருந்தது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி குறைப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆம் திகதியன்று கூட்டுத்தொகை ரூ.14,551,446 பெறுமதியான 07 நிதியங்கள் அந்த நிதியங்கள் தாபிக்கப்பட்டிருந்த 11 வருடங்கள் முதல் 13 வருடங்கள் வரையிலான காலப் பகுதியினுள் குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தாது காணப்பட்டது அவ்வாறே 05 புலமைப் பரிசில் நிதியங்களில் காணப்பட்ட கூட்டுத்தொகை ரூ.675,650 பெறுமதியான தொகை மீளாய்வு ஆண்டினுள் எதுவித புலமைப் பரிசிலும் வழங்குவதற்கு பயன்படுத்தப்படாதிருந்தது. | நிதியத்தைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல் ஒன்றிற்காக 2019 ஆம் ஆண்டிலே நிதிக் குழுவின் சிபாரிசுகள் மற்றும் முகாமைத்துவச் சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் அந்நிதியினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 05 புலமைப் பரிசில் நிதியங்களுக்குரிய மீளாய்வு ஆண்டுக் காலப் பகுதியினுள் தகைமை பெற்ற மாணவர்கள் இருக்காமையினால் மாணவர் புலமைப்பரிசில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதியம் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 3.2 செயற்படாத அல்லது குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்கு வருமானம் உழைத்துத் தருகின்ற ஒரு வழியாக 2018 ஆம் ஆண்டிலே நிர்மாணிக்கப்பட்டிருந்த வர்த்தகக் கட்டிடத் தொகுதியில் 5 அறைகள் மற்றும் இரண்டாம் மாடி முழுமையாக குத்தகைக்கு வழங்காது குறை பயன்பாட்டில் காணப்பட்டது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தின் தியகம வளாகத்தில் நிர்மாணத்தின் போது வர்த்தகக் கட்டிடத் தொகுதியொன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் குறித்த கட்டிடத்திற்கு அரசாங்க விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பெறுமதியின் அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டிலே நடவடிக்கை எடுத்த போதிலும் 4 வர்த்தக நிலையங்கள் மாத்திரம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய வர்த்தக நிலையங்களை குத்தகைக்கு விடுவதற்காக மீள் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. | மீதமுள்ள வர்த்தக அறைகளை குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆம் திகதியன்று தொழில்நுட்ப நிறுவகத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 269 மற்றும் தற்போதைய பதவியணி 171 ஆகக் காணப்படுகின்றமையால் 98 வெற்றிடங்களாகக் காணப்பட்டது. அந்த வெற்றிடங்களுக்கு ஒப்பந்த மற்றும் பணி வழங்கல் அடிப்படையின் மீது 44 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | வெற்றிடம் நிலவிய கல்விசார் பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2019.08.11 ஆம் திகதியன்று பத்திரிகை விளம்பரங்களை பிரசுரித்த போதிலும் தேர்தல் பணிகள் காரணமாகவும் மற்றும் ஆட்சேர்ப்பு வரையறுக்கப்படல் காரணமாக குறித்த பணிகளை மேற்கொள்ள முடியாது போயுள்ளது. | மீதமாகவுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு தன்மைகளும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் கைத்தொழில்கள் என்பவற்றிற்கு இடையிலான தொடர்பினை பேணி வரும் நோக்கில் அதற்காக மத்திய நிலையம் ஒன்றினை நிறுவுவதற்கு மீளாய்வு ஆண்டிலே உத்தேசித்துள்ள போதிலும் குறித்த பணி நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தனியான நிலையம் ஒன்றினை நிறுவிக்கொள்ள முடியாத போதிலும் ஒவ்வொரு பிரிவினாலும் அவர்களது பணிகளின் போது குறித்த கைத்தொழில் துறைகளின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்படுகின்றது. | தொழிற்பாட்டுத் திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |